# 5C உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஆழமான பகுப்பாய்வு

1. தயவு செய்து இயல் 5 இனுள் மீண்டும் ஒருமுறை செல்லுங்கள், படித்த பின்னர் அதனைக் கருத்திற் கொள்க / கலந்துரையாடுக: நீங்கள் பெற்றுக்கொண்ட பயிற்சியிலிருந்து விவரிக்கப்பட்ட எத்தகைய ஆசிரியக்கலைக் கோட்பாடுகள் உமக்குத் தெரியும், அவற்றுள் எவை உமக்குப் புதியன?

2. விவரிக்கப்பட்ட கோட்பாடுகளுள் எவை உமக்கு நடைமுறைப்படுத்த எளிமையாகத் தோற்றுகின்றன, எவற்றை ஏற்கனவே நீர் வகுப்பறையில் பயன்படுத்துகிறீர், எவ்வாறு அதனைச் செய்கிறீர்?

3. விவரிக்கப்பட்ட கோட்பாடுகளும் அவற்றை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துவதிலும் எவை குழப்பமாகவும் சிக்கலுடையனவாகவும் தோற்றுகின்றன ஏன்? நீர் எதிர்பார்க்கும் ஏற்படக்கூடிய தீர்வுகள் என்ன?

4. உங்கள் மாணவர்கள் தங்களுடைய வழமையான வகுப்பறைக் கற்பித்தலிலிருந்து வேறுபட்ட ஆசிரியக் கலைக்கும் கற்பித்தல் எண்ணக் கருக்களுக்கும் பழக்கப்பட்டுள்ளார்கள் என்னும் உண்மையினை என்ன உணர்வுடன் எதிர்கொண்டீர்கள்? நீங்கள் பெற்றுக்கொண்ட பயிற்சியில் இத்தகையதொன்றினை இம்முறையிலே கற்றிருக்கமாட்டீர்கள்? ஆசிரியர் மாணவர்கள் வகிபாகங்களை வேறுபட்டமுறையில் விளங்கிக் கொள்ளுதலுக்கு சரிசெய்தல், மற்றும் கட்டற்ற கற்றலின் இன்றியமையாமை, முதலிய நிலைமைகளை நீங்கள் எவ்வாறு அணுகினீர்கள்?

5. உங்களுடைய நடைமுறைப் பட்டறிவிலிருந்து, பின்வரும் கோட்பாடுகளுள் எந்த ஒன்று அல்லது பல உங்களால் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டது, தயவாக அறிந்து குறைந்தது மூன்று உருப்படியான எடுத்துக்காட்டுகளை எழுதி கலந்துரையாடுக: ஆசிரியர் நோக்குநிலை, உயர்வுக்கான நோக்குநிலை, தகைமை நோக்குநிலை, வகிபாகங்கள் பற்றிய புதிய விளக்கம், சுதந்திரமான நிலையை வலுப்படுத்தல், தனித்துவ நிலைப்படுத்தல், ஒவ்வொரு நாள் வாழ்வுடன் இணைவு, அகவைப் பொருத்தப்பாடு.

6. எந்தக் கல்விப் பாங்கினை மற்றும் தலைமைத்துவப் பாங்கினை நீங்கள் உருக்காட்டுகிறீர்கள்? கண்டிப்புடன் கூடிய அடக்குமுறைத் தலைமத்துவ அல்லது ஒற்றுமையுடன் கூடிய சனநாயகப் பாங்கினையா? குறிப்பாக, இத்தகைய கல்விப் பாங்கினை உங்கள் வகுப்பறை முகாமைத்துவத்தில் எவ்வாறு நடைமுறைப்படுத்திக் கொண்டு செல்வீர்கள்?

7. நீங்கள் தக்க வைத்துக் கொள்ள விரும்பும் உங்கள் / உமது தலைமைத்துவம் மற்றும் வகிபாக நடத்தை ஆகியவற்றின் வலிவுகள் எவை இப்பகுதியிலுள்ள எத்தகைமைகளையும் மதிநுட்பங்களையும் நீங்கள் புதிதாக மேம்படுத்த விரும்புகிறீர்கள்?

8. செயற்பாட்டுப் பகுதி (5B) இல் உள்ள மூன்று கட்டுரைகளைப் பற்றிக் கருத்துக்கூறுக: இப்பகுதியிலுள்ள கூற்றுகளும் கற்பித்தல் நடைமுறைப்படுத்தல்களும் எவ்வாறு உங்கள் பட்டறிவுகளுடன் தொடர்புறுகின்றன?